கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

கலைகலாசார பீடம்

நான்காம் வருட இரண்டாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு
2009/2010 (JULY/AUGUST - 2015)

# PHYS- **4203 – யுத்தம் மற்றும் சமாதான மெய்யியல்**

# (Philosophy of War and Peace)

நேரம் : 03 மணித்தியாலங்கள்

பகுதி I இல் இருந்து ஏதேனும் மூன்று வினாக்களுக்கும், பகுதி II இல் இருந்து ஏதேனும் ஒரு வினாவிற்குமாக மொத்தமாக நான்கு வினாக்களுக்கு விடை தருக

---

## பகுதி-I

01. யுத்தம் மற்றும் சமாதான மெய்யியல் நோக்கில்,

அ) முரண்பாடு (07புள்ளிகள்)

ஆ) யுத்தம் (08புள்ளிகள்)

இ) சமாதானம் (10புள்ளிகள்)

ஆகிய எண்ணக்கருக்களை வரையறுப்பதன் ஊடாக அவை தொடர்பான பொதுநிலைப்பாட்டினை வேறுபடுத்திக் காட்டுக.

02. யுத்தம் மற்றும் சமாதான ஒழுக்கவியல் பார்வையில்,

அ) "யுத்தமறுப்பு வாதம் ஒரு எதிர் யுத்த வாதமாகும்". இக்கூற்றை ஏற்கின்றீரா? உதாரணத்துடன் விளக்குக. (10புள்ளிகள்)

ஆ) நியாயயுத்தக் கொள்கையானது யதார்த்த வாதத்திற்கு ஆதரவான நிலைப்பாடுகளைக் கொண்டிருப்பதை உதாரணங்களுடன் விளக்குக.
(15புள்ளிகள்)

03. இலங்கையில் கடந்த முப்பது வருடங்களாக இடம்பெற்ற முரண்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு,

அ) முரண்பாட்டிற்கான அடிப்படைக் காரணம் (07புள்ளிகள்)

ஆ) முரண்பாட்டின் போதான சமூகப் பின்னணி (10புள்ளிகள்)

இ) யுத்தத்திற்குப் பின்னரான சமூக நிலை (08புள்ளிகள்)

ஆகியவற்றில் முரண்பாடு கட்டமைப்பை அடிப்படையாகக் கொண்டதா இல்லை முகவரை அடிப்படையாகக் கொண்டதா என்பதை வேறுபடுத்தி பார்ப்பதில் உள்ள சிக்கல்களை விளக்குக.

04. பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக.

அ) பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதப் பாவனையும் சமூக விழுமியமும்.

ஆ) சமகால யுத்தங்களில் மனித உரிமை.

இ) சமாதான உளவியல்.

ஈ) முரண்பாட்டுத் தீர்வும் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தமும்.

(12.5x2=25புள்ளிகள்)

## பகுதி –II

05. "ஒரு நாட்டில் நிரந்தர சமாதானத்தை கட்டியெழுப்புவதில் மீள் நல்லிணக்கச் செயற்பாடுகள் இன்றியமையாதவையாகும்". பகுப்பாய்வு செய்க.

(25புள்ளிகள்)

06. இவ்வுலகம் எதிர்மறைகளால் ஆனது என்பதனை யுத்தம் மற்றும் சமாதான ஒழுக்கவியல் கொள்கைகள் புலப்படுத்துகின்றமையை தெளிவுபடுத்துக.

(25புள்ளிகள்)